சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 31 | 22-12-2011

## 15-12-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : கண்ணிவெடி அகற்றும் தொழிநுட்பங்கள்**

**தொடக்கவுரையாடல் : ச. சுதாகர்**

போர்களின் போது எதிரிப்படை வீரர்களைக் கொல்வதைவிட காயப்படுத்துவதும் அங்கவீனர்களாக்குவதும் போரியல் ரீதியில் சாதகமானது. இந்த நோக்கத்தினை சிறப்பாகச் செய்து முடிக்கக் கூடியவையாக மிதிவெடிகள் இருப்பதால்தான் அவை மிகவும் பிரபலம் பெற்றுள்ளன.

படைகளுக்கெதிராக மட்டுமல்லாது மக்களுக்கெதிராகவும் மிதிவெடிகளைப் பயன்படுத்தும் போக்கு வியத்நாம் போரில் அமெரிக்கா வான்வழியாக கண்ணிவெடிகளை விதைத்த சம்பவத்தைத்தொடர்ந்து வழக்கமாகியது.

மிகப்பழைய காலத்திலிருந்தே தனிமனிதரைக் குறிவைத்துத்தாக்கும் பொறிவெடிகள் வழக்கத்தில் இருந்துவந்துள்ளன. 2ம் உலகப்போரின் பின்னரே, பாதிக்கப்படுபவரால் வெடிக்கவைக்கப்படும் மிதி வெடிகள் புழக்கத்துக்கு வந்தன.

இலங்கையில் அரச படையினரதும் விடுதலைப்புலிகளதும் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் எல்லைகளாக இருந்த இடங்களில் தான் அதிகளவில் மிதிவெடிகள் விதைக்கப்பட்டுள்ளன.

இறுதிப்போர்க்காலத்தில் வேகமான பின்வாங்கலும் முன்னேறுதலும் நிகழ்ந்ததால் மிதிவெடிகள் ஒப்பீட்டளவில் அதிகம் புதைக்கப்படவில்லை.

இலங்கையில் புதைக்கப்பட்டிருக்கும் பாக்கிஸ்தான் தயாரிப்பு மிதிவெடிகள்போன்றவையே உலகெங்கும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகை வெடிகள் 50 ஆண்டுகாலம் உயிர்ப்புடன் இருக்கும். இந்தியப்படைகளுடனான மோதல்களின் போது புலிகள் பயன்படுத்திய ஜொனி வெடிகள் மின்கலத்தில் இயங்குவதால் 4-5 ஆண்டுகள் மட்டுமே உயிர்ப்புடன் இருக்கும்.

இலங்கையில் உள்ள கண்ணிவெடிகளை அடிப்படையில் மூன்று வகைக்குள் அடக்கலாம்

1. மிதிவெடிகள்
2. தாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகள்
3. பொறிவெடிகள் (Booby Trap)

பொதுவாகப் பயன்படுத்தப்படும் மிதி வெடி ஒன்றின் உற்பத்திச்செலவு அண்ணளவாக 200 - 250 ரூபாவாகும். அவற்றை அகற்றுவதற்குப் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிட நேரும்.

மிதிவெடிகளை விட பொறிவெடிகளே அகற்றுவதற்கு மிகவும் சிரமமானது. ஏனெனில் அவற்றுக்கு பொதுவான உருவமோ அமைப்போ இருக்காது.

இலங்கையில் போர் நிகழ்ந்த நிலங்களில் இவ்வாறான கண்ணிவெடிகளையும் விட வெடிக்காமல் விட்ட வெடிபொருட்கள், உலோகத்துண்டுகள், வெடிமருந்து என ஏராளமான ஆபத்தான நச்சுப்பொருட்கள் பரவிக்கிடக்கின்றன.

காலால் மிதித்த உடனேயே கண்ணி வெடிகள் வெடித்துவிடும். மிதித்தபின் காலை எடுத்தபிறகே கண்ணி வெடி வெடிக்கும் என்பதெல்லாம் பொய்யானது. இதனை ஹொலிவூட் கண்ணிவெடிகள் என்று சொல்வார்கள். ஹொலிவூட் படங்களின் மூலமே இவ்வாறான போலியான கண்ணிவெடிகள் மக்களுக்குத் தெரியவந்தது. காலை எடுக்கும்போது வெடிக்கவேண்டுமானால் அக்கண்ணிவெடிகளின் வினைத்திறன் குறைவதுடன் தொழிநுட்பச்செலவும் அதிகரிக்கும்.

== கண்ணி வெடி அகற்றுதல் ==


கண்ணி வெடி விற்பனையைப் போல கண்ணி வெடி அகற்றுதலும் மிகப்பெரிய வணிகமாகும்.

மிகுதி அடுத்தபக்கம்

### அடுத்து வரும் தலைப்புக்கள்

**இலங்கையின் இடதுசாரி இயக்கம் பற்றிய வரலாற்றுப்பார்வை**
22-12-2011 | சி. கா. செந்திவேல்

**தமிழில் ஒலி நூல்களை உருவாக்குதல்**
29-12-2011 | மு. மயூரன்



ஆறுமுக நாவலர் (டிசம்பர் 18, 1822 - டிசம்பர் 5, 1879)

காலனியாதிக்க காலத்தில் சைவ சமயத்தை முன்னிறுத்தி கிறிஸ்தவ ஐரோப்பிய காலனியக்கூறுகளுக்கு எதிராக இயங்கியவர். "சைவ மறுமலர்ச்சியை" இலங்கையில் ஏற்படுத்தியவர்.

சைவ மறுமலர்ச்சி என்ற பெயரில் சமஸ்கிருதமயமாக்கத்தையும் வேளாள ஆதிக்கசாதியை மையப்படுத்திய சாதி ஒடுக்குமுறையின் வடிவங்களையும் பெண்ணடிமைத்தனத்தையும் வலியுறுத்தியும் மீட்டுருவாக்கம் செய்தும் வந்தார் என்ற போதிலும், காலனியாதிக்க எதிர்ப்பரசியல் எனும் இயக்கப்போக்கில் பல்வேறு முற்போக்கான மாற்றங்களைத் தமிழ் மொழியிலும் தமிழ்ச்சூழலிலும் ஏற்படுத்தினார்.

தமிழில் முதன் முதலில் தரிப்புக்குறிகளை அறிமுகப்படுத்தியவரும் இவரேயாவார். சந்திபிரித்து எளியதமிழில் மக்களுக்கு விளங்கும் படி எழுதவேண்டும் என்ற கொள்கையை கொண்டிருந்ததுடன், கதாப்பிரசங்கங்கள், துண்டுப்பிரசுரங்கள் போன்ற பிரசார வடிவங்களையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## கண்ணிவெடி அகற்றும் தொழிநுட்பங்கள்

(முன்பக்கத் தொடர்ச்சி)

கண்ணிவெடி அகற்றுதல் மூன்று முறைகளில் செய்யப்படலாம்.

1. மனிதமுறை
2. பகுதித் தன்னியக்கம்
3. முழுமையான தன்னியக்க முறை

மனித முறையான கண்ணிவெடி அகற்றுதலே வினைத்திறன் மிக்கதாகும். ஆனால் இம்முறையிலும் கூட ஆழமாக புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்ற முடியாது.
சிறிய மண் வாரி போன்ற உபகரணங்களைக்கொண்டு கண்ணி வெடி அகற்றப்படுகிறது. கண்ணி வெடிகள் வெடிக்கும்போது அதன் தாக்கம் வெடியிலிருந்து 30 பாகைக் கோணத்துள் அடங்கும் கூம்பு வடிவத்திலேயே இருப்பதால் அகற்றுபவருக்கு தாக்கம் குறைவாக ஏற்படுகிறது. அந்த 30 பாகைக்கூம்புக்கு வெளியே அகற்றுபவர் இருக்கும் படியாகவே உபகரணங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பகுதியான தன்னியக்க முறை என்பது, மனிதரால் தொலைதூரத்திலிருந்து இயக்கப்படும் கருவிகளைக்கொண்டு கண்ணிவெடியை அகற்றுவதாகும். இலங்கையில் BONEZA 4 என்கிற இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. இது தொலைதூரத்திலிருந்து இயக்கப்படுவதாகும்.

மிதிவெடிகளை இரும்புகொண்டு நிலத்தை அடிப்பதன் மூலம் வெடிக்கவைத்து செயலிழக்கச்செய்கிறது. வலுவான கவசம் இடப்பட்டிருப்பதால் இவ்வியந்திரம் வெடியால் பாதிப்புறாது. ஆனால், பொறிவெடி ஒன்றில் சிக்கி இவ்வியந்திரம் செயலிழந்து போனது. இது மிகவும் விலை உயர்ந்ததாகையால் இதனை மறுபடியும் கொள்வனவு செய்யவில்லை. தற்போது இலங்கையில் மனித முறை மட்டுமே பயன்பாட்டில் உள்ளது.

முழுமையான தன்னியக்க முறை இன்னமும் சோதனைச்சாலையிலேயே உள்ளது. செயற்கை அறிவு கொண்ட கருவிகளைப்பயனபட்டுத்தி கண்ணிவெடிகளை அகற்றலாமா என்று தீவிரமாக ஆராயப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் வயல் வெளிகளில் கண்ணிகளை உழவு வாகனங்களில் உழவுக்கான தட்டுக்களைப்பொருத்தி உழுவதன் மூலம் அகற்றும் முறை ஒன்று காணப்படுகிறது.

கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டுள்ள இடங்களைக்காட்டும் வரைபடங்கள் கிடைத்தாலும் கூட அதை நம்பி கண்ணி வெடி அகற்றுவது சிரமமானது. ஏனெனில் கண்ணி வெடிகள் பிளாத்திக்கினால் செய்யப்படுவதால் அவை மழை வெள்ளத்தில் மிதந்து வேறிடங்களுக்குச் சென்று விடும்.

== கண்ணிவெடிப் பரவல் தடை ஒப்பந்தங்கள் ==

கண்ணிவெடிகளைத் தடை செய்யும் ஒப்பந்தமொன்று கனடாவின் ஒட்டாவா நகரில் கையெழுத்தானது. அவ்வொப்பந்தத்தில் பல பலம் வாய்ந்த நாடுகள் கையெழுத்திட மறுத்துள்ளன.

## இலங்கையின் இடதுசாரி இயக்கம் பற்றிய வரலாற்றுப்பார்வை

(இந்த வாரம் இடம்பெறவுள்ள உரையாடலுக்கான முன்வரைவு.
சி. கா. செந்திவேல்

1. இடதுசாரி இயக்கம் பற்றிய அறிமுகம்
2. இலங்கையின் இடதுசாரி இயக்கத்துக்கு முன்னிருந்த நிலமைகள்
3. இலங்கை இடதுசாரி இயக்கத்தின் தோற்றம்
4. இடது சாரி இயக்கத்தில் ஏற்பட்ட முதலாவது கருத்து வேறுபாடும் பிளவு
5. தொழிற்சங்க இயக்கம்
6. தொழிற்சங்க, வெகுஜன போராட்டங்களின் வளர்ச்சிகள்
7. 60 களில் நடந்த மாபெரும் விவாதம்.
8. இடது சாரி இயக்கத்தின் போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள்.
9. இலங்கை இடதுசாரி இயக்கத்தின் இன்றைய நிலை.




சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.